# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1854/44 - 2014 මාර්තු මස 21 වැනි සිකුරාදා - 2014.03.21

*1854/44 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, விலங்கு நோய்கள் சட்டம்***

*விலங்கு நோய்கள் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டு 2014.03.07 ஆந் திகதிய 1852/74 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் விதிக்கப்பட்ட தடைகளைத் தளர்த்துதல் பற்றிய கட்டளை*

*விலங்கு நோய்கள் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டு 2014.03.07 ஆந் திகதிய 1852/74 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் கால்வாய் நோய் தொற்றுப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல, பியகம, தொம்பே, திவுலப்பிட்டிய, கம்பஹா, கடவத்தை, கட்டானை, மருதகஹமுல்ல, மினுவங்கொட, மீரிகம, நீர்கொழும்பு ஆகிய அரசாங்க மிருக வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் கடந்த மூன்று வார காலமாக புதிதாக கால்வாய் நோய்தாக்கமுற்ற விலங்குகள் பற்றி அறிக்கையிடப்படாத காரணத்தால் -*

*1. இக்கட்டளை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து செயற்படும் வண்ணம் -*

*(1) விலங்கு நோய்கள் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டு 2014.03.07 ஆந் திகதிய 1852/74 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் விதிக்கப்பட்ட தடைகள், மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல, பியகம, தொம்பே, திவுலப்பிட்டிய, கம்பஹா, கடவத்தை, கட்டானை, மருதகஹமுல்ல, மினுவங்கொட, மீரிகம, நீர்கொழும்பு ஆகிய அரசாங்க மிருக வைத்திய அதிகாரிகள் பிரிவிற்கு ஏற்புடைத்தாகாது எனவும்;*

*(2) மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல, பியகம, தொம்பே, திவுலப்பிட்டிய, கம்பஹா, கடவத்தை, கட்டானை, மருதகஹமுல்ல, மினுவங்கொட, மீரிகம, நீர்கொழும்பு ஆகிய அரசாங்க மிருக வைத்திய அதிகாரிகள் பிரிவிலும் விலங்குகளை அறுத்தல் மற்றும் அவற்றின் இறைச்சி மற்றும் தோல் உள்ளிட்ட ஏனைய உடற்பாகங்களையும், விற்றல், விற்பனைக்கு விடுதல், விற்பனைக்குக் காட்சிப்படுத்துதல், களஞ்சியப்படுத்துதல், வழங்கல், விநியோகித்தல், மற்றும் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குக் கொண்டு செல்லுதல் ஆகியன இக்கட்டளையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனவும் ;*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(3) அதிகாரமளிக்கப்பட்ட மிருக வைத்திய அதிகாரியொருவரின் எழுத்திலான அனுமதியின்றி மேற்குறிப்பிட்ட அரசாங்க மிருக வைத்திய அதிகாரிகள் பிரிவிலிருந்து விலங்குகள், இறைச்சி மற்றும் தோல் உள்ளிட்ட உடற்பாகங்கள், (சாணம் உள்ளிட்ட) விலங்குக்கழிவுகள், மற்றும் பண்ணைக்கழிவுகள் ஆகியன வேறிடங்களுக்கு அகற்றப்படவோ அல்லது கொண்டு செல்லப்படவோ கூடாது எனவும்

இத்தால் கட்டளை பிறப்பிக்கின்றேன்.

2. கால்வாய் நோய் மற்றும் ஏனைய குறித்துரைக்கப்பட்ட நோய்களைக் கட்டுப்படுத்தவும், அவை பரவிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு -

(1) 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்கள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, அச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு பின்வருவோர்களை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களாக செயற்பட வேண்டுமெனவும் :-

- பணிப்பாளர் (கால்நடை சுகாதாரம்) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்.
- பிரதிப் பணிப்பாளர் (கால்நடை சுகாதாரம்) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்.
- உதவிப் பணிப்பாளர் (கால்நடை சட்டவிவகாரம் மற்றும் விலங்கு நலனோம்புகை).
- மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் (வடமேல் மாகாணம்).
- மாவட்டக் கால்நடை வைத்தியர் (கம்பஹா மாவட்டம்).
- வடமேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல, பியகம, தொம்பே, திவுலப்பிட்டிய, கம்பஹா, கடவத்தை, கட்டானை, மருதகஹமுல்ல, மினுவங்கொட, மீரிகம, நீர்கொழும்பு ஆகிய அரசாங்க மிருக வைத்திய அதிகார பிரதேசத்துக்குப் பொறுப்பான அரசாங்க மிருக வைத்திய அதிகாரிகள்.
- மேற்குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க மிருகவைத்திய அதிகாரிகள் அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்/கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்கள்.
- இலங்கைப் பொலிசுப்படையின் ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தர்கள்.

(2) மேற்குறிப்பிட்ட விலங்கு நோய்கள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, கால்வாய் நோயைக் கட்டுப்படுத்தும் பொருட்டும், பரவிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டும் ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரும் மேலே 1 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள கட்டளை உரிய முறையில் அமுல்படுத்தப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும், அதன் பொருட்டு அச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள சகல தத்துவங்களையும் பிரயோகிக்கலாமெனவும்

இத்தால் கட்டளை பிறப்பிக்கின்றேன்.

3. இக்கட்டளையில் -

"விலங்கு" என்பது பசுவின மாடு, எருமையின மாடு, செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் பன்றி என்பனவாகும்.

"அதிகாரமளிக்கப்பட்ட விலங்கு வைத்தியர்" என்பது பின்வருவோராதல் வேண்டும் :-

- பணிப்பாளர் (கால்நடை சுகாதாரம்) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்.
- பிரதிப் பணிப்பாளர் (கால்நடை சுகாதாரம்) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்.
- உதவிப் பணிப்பாளர் (கால்நடை சட்டவிவகாரம் மற்றும் விலங்கு நலனோம்புகை).
- மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் (மேல் மாகாணம்).
- மாவட்டக் கால்நடை வைத்தியர் (கம்பஹா மாவட்டம்).
- மேல் மாகாணத்தின் கமபஹா மாவட்டத்தின் அத்தனகல்ல, பியகம, தொம்பே, திவுலப்பிட்டிய, கம்பஹா, கடவத்தை, கட்டானை, மருதகஹமுல்ல, மினுவங்கொட, மீரிகம, நீர்கொழும்பு ஆகிய அரசாங்க மிருக வைத்திய அதிகாரி பிரிவுக்குப் பொறுப்பான அரசாங்க மிருக வைத்திய அதிகாரிகள்.

4. விலங்கு நோய்கள் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டு 2014.03.07 ஆந் திகதிய 1852/74 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் கம்பஹா மாவட்டத்துக்கு விதிக்கப்பட்ட பின்வரும் தடைகளை இத்தால் நீக்குகின்றேன்.

(1) நோய்த்தொற்றத்தக்க விலங்குகளில் செயற்கை முறை இனவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான தடை.

(2) பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்தல், விற்பனைக்குத் காட்சிப்படுத்துதல், களஞ்சியப்படுத்துதல், வழங்கல், விநியோகித்தல் ஆகியவை தொடர்பான தடை.

(டாக்டர்) டபிள்யூ. கே. த சில்வா,
பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்.

**அட்டவணை**

**விலங்குகளைக் கொல்லுதல், அவற்றின் இறைச்சியை அல்லது உடற்பாகங்களை விற்றல், விற்பனைக்குக் காட்சிப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், வழங்கல், விநியோகித்தல் தொடர்பான நிபந்தனைகள்**

1. 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குகள் சட்டம், இறைச்சிக்கடைக்காரர்கள் கட்டளைச் சட்டம், விலங்குச் சித்திரவதைக் கட்டளைச் சட்டம் மற்றும் தொந்தரவுகள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கமைவாக விலங்குகள் அறுக்கப்படல் வேண்டும்.

2. பின்வரும் இடங்களில் ஏதேனுமொரு இடத்தில் மாத்திரம் விலங்குகள் அறுக்கப்படல் வேண்டும்..

(1) இறைச்சிக்கடைக்காரர்கள் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது 1971 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க உள்ளூராட்சி அமைச்சர் (அதிகாரங்களைக் கையளித்தல்) சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் அங்கீகரிக்கப்பட்ட பொது விலங்கறுமனை.

(2) இறைச்சிக்கடைக்காரர்கள் கட்டளைச் சட்டத்தின் 14 (அ) பிரிவின் கீழ் ஏற்புடைய அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இடம்.

(3) உள்ளூராட்சிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் விலங்கறுமனை.

3. மேலே 2 ஆம் நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு இடம் தொடர்பிலும் பின்வரும் அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

(1) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சுற்றாடல் சட்டம் அல்லது மாகாண சபையால் இயற்றப்பட்ட சுற்றாடல் தொடர்பான நியதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்.

(2) தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொழில் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழ்.

4. பின்வருவோர் மாத்திரமே விலங்குகளை அறுத்தலில் ஈடுபடுத்தல் வேண்டும்.

(1) இறைச்சிக்கடைக்காரர்கள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அக்கட்டளைச் சட்டத்தின் 5, 6 மற்றும் 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக வழங்கப்பட்ட இறைச்சிக்கடைக்காரர் அனுமதிப்பத்திரத்தை உடையவர்.

(2) இறைச்சிக்கடைக்காரர்கள் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தற்காலிக இறைச்சிக்கடைக்காரர் அனுமதிப்பத்திரத்தை உடையவர் ; அல்லது

(3) இறைச்சிக்கடைக்காரர்கள் கட்டளைச் சட்டத்தின் 18 (1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட விசேட அனுமதிப்பத்திரத்தை உடையவர்.

5. அதிகாரமளிக்கப்பட்ட விலங்கு வைத்தியரொருவரால் பரிசீலிக்கப்பட்டு கால்வாய் நோய் மற்றும் ஏனைய குறித்துரைக்கப்பட்ட நோய்களால் பாதிக்கப்படாததெனவும், அறுப்பதற்குப் பொருத்தமானதெனவும் உறுதிப்படுத்தப்பட்ட விலங்குகள் மாத்திரம் அறுக்கப்படல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு விலங்கும் அவ்விலங்கின் சொந்தக்காரரின் செலவில் குறித்த விலங்கு வைத்தியரால் காதடையாளமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

6. அறுக்கப்படவுள்ள ஒவ்வொரு மாடும் 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக காதடையாளமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

7. அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் முன்னிலையிலேயே மற்றும் மேற்பார்வையின் கீழ் விலங்குகள் அறுக்கப்படல் வேண்டும்.

8. விலங்குகள் அறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அறுப்பவரால் பின்வரும் ஆவணங்கள் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(1) இறைச்சிக்கடைக்காரர் அனுமதிப்பத்திரம்.

(2) அறுக்கப்படும் விலங்கு அறுப்பவருக்குச் சொந்தமானதென்பதை உறுதிப்படுத்தும் ஆவணம்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட விலங்கு வைத்தியரொருவரால் பரிசீலிக்கப்பட்டு கால்வாய் நோய் மற்றும் ஏனைய குறித்துரைக்கப்பட்ட நோய்களால் பாதிக்கப்படாததெனவும், அறுப்பதற்குப் பொருத்தமானதெனவும் உறுதிப்படுத்தி வழங்கப்பட்ட சான்றிதழ்.

9. அறுக்கப்பட்ட விலங்கொன்றிலிருந்து பெறப்பட்ட இறைச்சி அல்லது அதன் பாகங்கள் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமின்றி விலங்கு கொல்களத்திலிருந்து அகற்றப்படலாகாது.

10. உள்ளூராட்சிமன்றமொன்றினால் அங்கீகரிக்கப்பட்ட இடத்தில் மாத்திரமே இறைச்சி விற்பனை, இறைச்சியைக் களஞ்சியப்படுத்துதல், விற்பனைக்குக் காட்சிப்படுத்தல், வழங்கல் அல்லது விநியோகித்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

11. அதிகாரமளிக்கப்பட்ட மிருக வைத்தியரால் சான்றுப்படுத்தப்பட்ட இறைச்சி மாத்திரமே விற்கப்படவோ, விற்பனைக்கு காட்சிப்படுத்தப்படவோ வேண்டும்.

12. அதிகாரமளிக்கப்பட்ட மிருக வைத்தியரால் அங்கீகரிக்கப்பட்ட வாகனமொன்றிலேயே இறைச்சி மற்றும் உடற்பாகங்கள் ஏற்றியிறக்கப்படல் வேண்டும்.

13. அதிகாரமளிக்கப்பட்ட மிருக வைத்தியரால் சான்றுப்படுத்தப்பட்ட இறைச்சி மற்றும் உடற்பாகங்கள் மாத்திரமே ஏற்றியிறக்கப்படல் வேண்டும்.

*4- 183*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.